06.08.19 EVERWIN MATRIC.HR.SEC.SCHOOL
Std: X MATERIAL OF THE MONTH
TAMIL AUGUST
இயல் - 4

1. உயிரினங்களில் மனிதரை உயர்த்திக் காட்டுவது அவர்களின் சிந்தனை ஆற்றல்.
2. இவ்வுலகை மிகுதியாக ஆளக்கூடிய ஒரு தொழில் நுட்பம் செயற்கை நுண்ணறிவு.
3. இயல்பான மொழிநடையை உருவாக்குதல் என்னும் மென்பொருள் பெயர் வேர்டுஸ்மித்
4. 2016-இல் நோயாளி ஒருவரின் புற்று நோயைக் கண்டுபிடித்த ஐ.பி.எம். நிறுவனத்தின் கணினியின் பெயர் வாட்சன்.
5. மெய்நிகர் உதவியாளர்களை 'இங்கிவனை யான் பெறவே என்ன தவம் செய்துவிட்டேன்' என்று பாரதியார் மெச்சுவது போல் மெச்சிக் கொள்ளலாம்.
6. உலக அளவில் அதிகம் விற்பனையாகும் ரோபோ பெப்பர்
7. இந்தியாவின் பெரிய வங்கி பாரத் ஸ்டேட் வங்கி
8. சோபியா என்னும் இயந்திரப் பெண்ணை உருவாக்கிய நிறுவனம் ஹான்சன் ரோபோட்டிக்ஸ்
9. தகவல்களைக் கொடுத்தால், அழகான சில கட்டுரைகளை உருவாக்கும் மென்பொருள் வேர்டுஸ்மித்
10. தமிழ்க்கல்வெட்டு காணப்படும் பிற நாடு சீனா
11. பண்டையத் தமிழர் அடிக்கடி வணிகத்திற்காகச் சென்று வந்த சீன நகர் சூவன்சௌ
12. ஸ்மார்ட்போன் என்பதற்கு இணையான தமிழ்ச்சொல் திறன்பேசி
13. பெருமாள் திருமொழியில் உள்ள பாடல்களின் எண்ணிக்கை 105.
14. குலசேகர ஆழ்வாரின் காலம் எட்டாம் நூற்றாண்டு.
15. 'மாளாத காதல் நோயாளன் போல் மாயத்தால்' என்னும் அடிகளில் 'மாயம்' என்பதன் பொருள் விளையாட்டு.
16. காதல் நோயாளன் போன்றவர் குலசேகராழ்வார்.
17. வாளால் அறுத்துச் சுடுபவர் மருத்துவர்.
18. மாயத்தால் மீளாத் துயர் தருபவர் வித்துவக்கோட்டு இறைவன்.
19. வித்துவக்கோடு என்னும் ஊர் கேரள மாநிலத்தில் பாலக்காடு மாவட்டத்தில் உள்ளது.
20. எட்டுத் தொகை நூல்களுள் ஒன்று பரிபாடல்.
21. 'விசும்பில் ஊழி' எனத் தொடங்கும் பரிபாடலை எழுதியவர் கீரந்தையார்.
22. பரிபாடல் "ஓங்கு பரிபாடல்" என்னும் புகழுடையது.
23. சங்க நூல்களுள் பண்ணோடு பாடப்பட்ட நூல் பரிபாடல்
24. முதல் பூதம் எனப்படுவது வானம்
25. நெருப்புப்பந்தாய் வந்து குளிர்ந்தது பூமி
26. 'விசும்பில் ஊழி ஊழ் ஊழ் செல்ல" - இவ்வடியில் ஊழி யுகம் என்னும் பொருளையும் 'வாழ்' என்பது முறை என்னும் பொருளையும் தருகிறது.
27. பால் என்பது திணையின் உட்பிரிவு ஆகும்.
28. இடம் மூன்று வகைப்படும்.
29. இலக்கண முறையுடன் பிழையின்றிப் பேசுவதும் எழுதுவதும் வழாநிலை எனப்படும்.
30. இலக்கண முறையின்றிப் பேசுவதும் எழுதுவதும் வழு எனப்படும்.
31. ஒரு விரலைக் காட்டிச் சிறியதோ? பெரியதோ? என்று கேட்பது வினா வழு.
32. கண்ணன் எங்கே இருக்கிறார் என்ற வினாவிற்குக் கண்ணாடி பைக்குள் இருக்கிறார் என்று கூறுவது விடை வழு.
33. மாறன் என்பவன் தன்னைப் பற்றிப் பிறரிடம் கூறும்போது "இந்த மாறன் ஒரு நாளும் பொய் கூற மாட்டான்" என்று கூறுவது இடவழுவமைதி
34. தென்னை மரங்கள் உள்ள பகுதியைத் தென்னந்தோட்டம் என்று கூறுவது மரபு வழு.
35. உயர்திணையின் பிரிவுகள் மூன்று.
36. அஃறிணையின் பிரிவுகள் இரண்டு
37. நடந்தாய், வந்தீர் என்பன முன்னிலை வினைகள்.
38. நீர், நீங்கள் என்பன முன்னிலை பெயர்கள்
39. வந்தேன், வந்தோம் என்பன தன்மை வினைகள்.
40. வந்தான், சென்றான் என்பன படர்க்கை வினைகள்